விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 229 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 20 சனிக்கிழமை (05.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 13ஆவது திருத்தம் தொடர்பான
# முன்மொழிவுகளை சமர்ப்பியுங்கள்
## அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு அறிவிப்பு

*(கொழும்பு)* 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

*(14ஆம் பக்கம் பார்க்க)*

### 13 தொடர்பில் ஆராய
## ரணில் தலைமையில் மீண்டும் சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 15ஆம் திகதி சர்வகட்சி மாநாட்டை மீண்டும் கூட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

➤14

## எரிபொருள் வரிசை மீண்டும் உருவாகும்?

(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டும் எரிபொருள் வரிசை உருவாகும் அபாயம் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம் பெற்ற தெங்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் 29ஆவது வருடாந்த மாநாட்டில்

➤15

## விவாதத்தின் பின் 13 தொடர்பில் பார்க்கலாம்
### பிரதமர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை விவாதத்துக்கு கொண்டு வரட்டும். அதன்போது பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடை முறைப்படுத்து

➤16

### பறாளாய் முருகன் ஆலய விவகாரம்
## சுழிபுரத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்
### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

*(யாழ்ப்பாணம்)*

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியை மீளப் பெற வேண்டும் என வலியுறுத்தி சுழிபுரம் சந்தியில் இன்று காலை 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறித்த போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## யாழில் ஹெரோயினுடன் கைதான மனைவியை
### பொலிஸ் நிலையத்தில் தாக்கிய கணவனும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் போதைப்பொருளுடன் கைதான தனது மனைவியைப் பொலிஸ் நிலையத்தினுள் புகுந்து தாக்கிய கணவனைப் பொலி

➤15

## 450 மில்லியன் இந்தியா நிதி உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து 450 மில்லியன் இந்திய ரூபாய் நிதி மானியமாக கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்

➤15



## கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்றுக்கு மட்டுமே அதிகாரம்
### ஏனையவர்கள் பரிந்துரையை ஏற்கோம் – ஜனாதிபதி

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்றம் தவிர்ந்த வேறு எவருடைய பரிந்துரைகளையும் நிபந்தனைகளையும் ஏற்கப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

➤15

## 300 பொருட்களுக்கு இறக்குமதி மீதான கட்டுப்பாடு நீக்கம்

(கொழும்பு)

மேலும் 300 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது,

அதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர்

➤15

## 13ஐ முழுமையாக அமுலாக்கினால் நல்லிணக்கம் இல்லாமல் போகும்
### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



(நீர்கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நாட்டில் நல்லிணக்கம் இல்லாமல் போகும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும்

➤15

### இலங்கை - இந்திய கப்பல் சேவை
## மத்திய நிலையமாக தலைமன்னார் தெரிவு
### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான படகு சேவையை ஆரம்பிப்பதற்கான மத்திய நிலையமாக தலைமன்னார்

➤15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு.தி.சிவகுமார் அவர்களின் மாமனார்
அமரர் **இராமநாதன்**
**பரராஜசிங்கம்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 26.11.1937 மறைவு 23.06.2023

(C-7008)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## மரத்தளபாடம் விற்பனைக்கு

பாவித்த தேக்கு அலுமாரி முதிரை
அலுமாரி, 2 வெளி யன்னல், பீலிகள்
கதவு நிலை பாவிக்காத
மலிவு விலை Comat wheel chair

**077 873 0129**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(16608)

## பெண் விற்பனையாளர் தேவை

எமது பிடைவை நிறுவனத்திற்கு அனுபவம்
உள்ள அல்லது தொழில் பழக விருப்பம்
பெண் விற்பனையாளர்கள் தேவை.
மதிய உணவு வழங்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**சிவகணேசன் TEX**

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(16615)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி.**சிந்துஜா பிரதீபன்** அவர்களின்
மாமியார்
அமரர் **அட்சலிங்கம்**
**தங்கேஸ்வரி**

தோற்றம் 31.03.1936 மறைவு 18.05.2023



அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-7007)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டுடன் 8 பரப்பு**
**காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை றோட் புத்தூர் சந்தியில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரம்
- குடியிருப்பு சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

(16610)

**076 788 0591**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 21 பரப்பு**
**காணி விற்பனைக்கு உண்டு.**

- புதிய செம்மணி வீதி
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்

(16610)

**076 788 0591**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி உப அதிபர்
திரு.**செந்தில்குமரன்** அவர்களின்
மாமியார்
அமரர் **சபாரட்ணம்**
**தங்கேஸ்வரி**

தோற்றம் 29.08.1944 மறைவு 19.03.2023



19.03.2023 அன்று
காலமானார். அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-7006)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# மரண அறிவித்தல்



# கதிரித்தம்பி சுப்பிரமணியம்

தோற்றம் 16.05.1938 மறைவு 03.08.2023

வலவந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி சுப்பிரமணியம் அவர்கள் 03.08.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற சிவக்கொழுந்தின் கணவரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், சின்னையா, கணபதிப்பிள்ளை, கனகம்மா, சரஸ்வதி வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும் சிறீபாஸ்கரன், அமிர்தலிங்கம், பாலசாந்தனி ஆகியோரின் தந்தையும் கிருபைராஜா, இரத்தினமாலா ரேனுகாவின் மாமனாரும் சர்மிலா, அஸ்வின், வாசவன், பிரணவி, பிரவீஸ், கௌசி, தினேஸ், ஹம்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.08.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வலவந்தோட்டம்,
தாணவாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-7005)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வைத்தியர்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு

## சுகாதார பணிப்பாளர் சத்தியமூர்த்தி

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.**

முல்லைத்தீவு வைத்திய சாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கையில் உள்ள வைத்திய நிபுணர்கள் அதிகம் வெளி நாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் இரண்டு வைத்திய சாலைகளுக்கும் இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சுகாதார அமைச்சரும் இருந்தார். அதனை நாங்கள் தற்போது தொடர்ந்து கேட்கின்றோம். எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

விஷேட ஆளணி எங்களுக்கு தேவையாக உள்ளது. நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. உள்ளக கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது. அதற்கு திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு வைத்திய சாலையில் காணி பிரச்சினை தாமதமானதால் பாரிய கட்டிடங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோல் மன்னாரிலும் சீரிஸ்கான் வந்து திரும்பிப் போனதால் பிரச்சினை இருந்தது. அங்கும் நிரந்தர வைத்திய பணிப்பாளர் இல்லாமை ஒரு பிரச்சினையாக உள்ளது.

உள்ளகட்டமைப்பையேனும் இரண்டு வைத்தியசாலையிலும் குறைபாடாக இருக்கிறது. இது தொடர்பாக கூட்டத்தில் தீர்மானமாக எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டு இதனை நிவர்த்தி செய்வோம் எனத்தெரிவித்தார். (4-104-299)

# இனந்தெரியாத நபர்களால் மோ.சைக்கிளுக்கு தீ வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று இனம் தெரியாத நபர்களினால் தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிளை இனம் தெரியாத நபர்கள் தீக்கிரையாக்கி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உரிமையாளரால், கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-33)

# போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆறுகால்மட பகுதியில் பெண்ணொருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆறுகால்மட பகுதியில் பெண்ணொருவர் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் , அவரிடம் இருந்து 80 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட போதைப் பொருளுடன் பெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-33)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சைவம், தமிழ், பண்பாடு, கலாசார விழுமியங்கள் தொடர்பான யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் காலை 9 மணிக்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கனிஷ்ட பிரிவு -6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 100 சொற்கள், மத்திய பிரிவு - 9,10,11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 150 சொற்கள், மேற்பிரிவு 12,13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 250 சொற்கள் ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

கட்டுரைகள் யாவும் மதிப்பீட்டு குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு பரிசில்களும் ஏனைய 7 சிறந்த கட்டுரைகளுக்கு பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் யாவும் நல்லூர் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா நிகழும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வழங்கப்படும் என அமைப்பின் செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (4)

# நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கத்தின் நினைவஞ்சலி கூட்டம் நாளை 6 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள US Hotel இல் நடைபெறவுள்ளது. (4)

# சிவாஜிலிங்கத்திற்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் ஒப்பமிட்டு, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு ஒப்பமிடப்பட்டு குறித்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

சட்ட முறையற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டமைக்காகவே அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு நாளை மறுதினம் வழக்கிற்காக சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4-104)

காங்கேசன்துறை

# சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடிய பலர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடிய குற்றச்சாட்டின் கீழ் 22 பேர் காங்கேசன்துறை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட இரும்புகளும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த தொழிற்சாலையில் இரும்பு திருடுவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)


யானைத் தாத்தா தேவன் பூதனார் என்ற புனைபெயரில் சிறுவர் இலக்கியம் படைத்து வரும் சீரேஷ்ட சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ.தேவராஜாவின் "வானம் எங்கள் வசம்" என்ற தலைப்பிலான ஒலிப் பேழை, நூல் மற்றும் "சாதனா ஆடுறா" என்ற நூலுக்குமான வெளியீட்டு அரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது. (4)



யாழ்ப்பாணம் சுன்னாகம் மயிலிணி சைவ மகா வித்தியாலய விவசாயக்கழகமும் ஆரம்பப்பிரிவு மற்றும் விசேட கல்வி அலகு மாணவர்கள் இணைந்து மயிலிணி முருகமூர்த்தி கோவில் முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை சிறுவர் சந்தை ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டு சிறப்பாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 05.07.2023 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

## வைத்திலிங்கம் ஜெயவீரசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.08.2023) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் இறுதிச்சடங்கில் நேரிலும் தொலைபேசியிலும் கலந்துரையாடி ஆறுதல் தெரிவித்த அன்பர்கள், உறவினர்கள், அயலவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**உபய கதிர்காமம்**
**புலோலி தெற்கு, புலோலி.** (C-7012)

**குடும்பத்தினர்**
**077 404 8877**

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

### நிலப்பரப்பு

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-
**ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

(16612)

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 2023.09.01ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ்.மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் “ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்” எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி - 18.08.2023**

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
04.08.2023

(C-7009)

# மரண அறிவித்தல்

பிறப்பு
1947
06
18



இறப்பு
2023
08
04

## கதிரவேலுப்பிள்ளை சிவபாலசுந்தரம்

*பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலுப்பிள்ளை சிவபாலசுந்தரம் அவர்கள் நேற்று (04.08.2023) காலமாகிவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - இத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வராசா (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் - கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச, தர்மகார்த்தா பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயம்), தெய்வேந்திரம் (கலா பற்றறி ரேடிங் சென்ரர் - வவுனியா), மகேந்திரராஜா (ஜேர்மனி), கௌசலாதேவி (பிரான்ஸ்), இலங்கேஸ்வரி (இங்கிலாந்து), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), உதயகுமார் (ஹொலண்ட்), சசிகலா (பிரான்ஸ்), ரதிமாலசிங்கா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் தெல்லுக்கலட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**தகவல்**
**குடும்பத்தினர்**

(C-7010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்காக கச்சதீவு விவகாரத்தை பயன்படுத்தும் அண்ணாமலை

## யாழ்.மீனவ சங்கங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மீனவர்கள் அத்து மீறிய இந்தியா ரோலர் படகுகளினால் தமது வாழ்வாதாரங்களை இழந்து வரும் நிலையில் தேர்தல் அரசியலுக்காக பாஜக தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை தமிழக மீனவர்களை உசுப்பேத்தக் கூடாது என யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாசம் வேண்டுகோள்விடுத்தது.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழு மாவட்ட கடை தொழிலாளர் கூட்டுறவு சமாசக் கட்டடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் வருடம் இந்தியாவில் தேர்தல் இடம்பெற வாய்ப்புகள் உள்ள நிலையில் தேர்தலை இலக்காக வைத்து தமிழக மீனவமக்களின் வாக்குகளை வேட்டையாடுவதற்கு அண்ணாமலை செயற்பட்டு வருகிறார்.

அதன் ஒரு அம்சமாக தமிழ் நாட்டில் இடம்பெற்ற பாதயாத்திரை நிகழ்வில் கச்சதீவை இந்தியா மீனவர்களுக்கு மீட்டு தருவதற்கு பிரதமர் மோடியிடம் பேசுவதாக தெரிவித்துள்ளார்.

அண்ணாமலை யாழ்ப்பாணம் வந்தபோது வடக்கு மக்கள் தொப்புள் கொடி உறவு அவர்களுக்கு பாதிக்காத வகையில் இந்திய மீனவர்களை கடற்றொழிலில் ஈடுபடுவது தொடர்பில் தாம் பேசுவதாக தெரிவித்துச் சென்றிருந்தார்.

ஆனால் தேர்தலை இலக்காக வைத்து தமிழக மீனவ மக்களின் வாக்குகளை பெறுவதற்காக கச்சதீவை மீட்டு தரப் போகிறேன் என கூறுகிறார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆகவே அத்துமீறிய இந்திய ரோலர் படகுகளை தடை செய்வதற்கு யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் அமைச்சரும் ஜனாதிபதியும் விரைவான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (4-104)

# உணவு வீணடிப்பினால் விலை அதிகரிக்கின்றது

## ஐ.நா அறிக்கை

(கொழும்பு)

நாட்டில் உணவுப்பொருட்கள் வீணடிக்கப்படுவதனால் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் புத்தி மாரம்பே உள்ளிட்ட நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை நேற்று முன்தினம் கண்டியில் வைத்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரிசி, சோளம், உருளைக் கிழங்கு, போஞ்சி, வாழைப் பழம், கோழி இறைச்சி மற்றும் கடல் உணவுகள் உள்ளிட்ட வற்றின் தரவுகளை கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் அதிகளவில் உணவுப் பொருட்கள் வீணடிக்கப்படுவதாக தெரியவந்துள் ளது.

இதன் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பை பதிவு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் கொழும்பிற்கு எந்த வொரு உணவுப் பொருட்களையும் கொண்டு வருவதில் உள்ள தூரமும் விலை உயர்வில் தாக்கம் செலுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடைநீக்கம் மீள ஆராயப்போவதில்லை என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் தடை நீக்கம் குறித்து மீள ஆராயப்போவதில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து ஐந்து இஸ்லாமிய அமைப்புகளிற்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார்.

எனினும் கத்தோலிக்க திருச்சபை அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதனை கண்டித்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தடை நீக்கப்பட்டமை குறித்து அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யுமா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தற்போதைக்கு இது குறித்து மீள்பரிசீலனை செய்யும் திட்டம் எதுவுமில்லை என குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவினரும் பாதுகாப்புடன் தொடர்புபட்டவர்களும் இணைந்து தடைகளை நீக்கும் முடிவை எடுத்தனர் என தெரிவித்துள்ள அவர் விமர்சனங்கள் உள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம்.

எனினும் இதனை தீவிரமாக ஆராய்ந்த பின்னரே செய்துள்ளோம். அரசியல்வாதிகள் எவரும் இதில் தொடர்புபடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நாங்கள் மீள் பரிசீலனை செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



எனினும் தடைநீக்கப்பட்ட அமைப்புகளின் நடவடிக்கைகளை உரிய அமைப்புகள் தொடர்ந்தும் கண் காணிக்கும் எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்பு தொடரும். அவர்கள் பிழை செய்தால் தடை மீண்டும் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இலங்கை-இந்திய பாராளுமன்ற

# நட்புறவுச் சங்கத்தை கூட்டுமாறு இந்திய உயர்ஸ்தானிகள் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கை - இந்தியப் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தினைக் கூட்டுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன விடம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று முன்தினம் வியாழக் கிழமை பாராளுமன்றத்தில் மரியாதையின் நிமித்தம் சந்தித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் போது கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது சபாநாயகருக்கு விளக்கமளித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பரஸ்பர நீண்டகாலப் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது என்றும் உயர்ஸ்தானிகர் இங்கு சுட்டிக்காட்டினார். (நி)

# இராசிபலன்

05.08.2023
ஆடி 20, சனிக்கிழமை
சதுர்த்தி பிற்பகல்3.38 மணிவரை

பூரட்டாதி முற்பகல் 10.50 மணிவரை
சுபநேரம் -3.04-4.34 மணிவரை
இராகுகாலம்-9.04-10.34 மணிவரை

சந்திராஷ்டமம்-
மகம்

**வளவன்**

**மேஷம்:** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்:** தலைமைப்பதவிகள் உங்களை நாடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**மகரம்:** பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்:** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆதாரமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி கூடும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாக மடைவீர்கள், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**தனுசு:** நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

நன்றிகாட்டுதல் என்பது எமைகள் திருப்பி அடைக்கும் கடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் நடந்த கோர விபத்து ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் பலி



(கொழும்பு) தம்புத்தேகம ஈரியகம பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் 4 பேர் உயிரிழந்ததுடன் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகலில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த லொறி ஒன்று வீதியோரத்தில் நிற்கத் தயாரான போது, அதே திசையில் பயணித்த வான் ஒன்று லொறியின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# 4 மாதங்களாக இன்சுலின் இல்லை

## ராஜித சேனாரத்ன

(கொழும்பு) நான்கு மாதங்களாக நாட்டிலுள்ள எந்தவொரு வைத்திய சாலைகளிலும் இன்சுலின் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது இன்சுலின் பற்றாக்குறை நிலவுகிறது.

இன்சுலின் இல்லாத பட்சத்தில் நீரிழிவு நோயாளர் ஒருவருக்கு வழங்கக் கூடிய சிகிச்சை என்ன என்பது தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

இலங்கையின் சுகாதாரத் துறையில் 4 மாதங்களாக இன் சுலின் மருந்து இல்லை என்பது கவலையாக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

(கொழும்பு) லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப் படமாட்டாது என அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளமையினால் லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படும் என அவர் முன்னதாக அறிவித்திருந்தார்.

எனினும், முன்னதாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட எரிவாயு கையிருப்பில் உள்ளமையால் தற்போதைய நிலையில் விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தற்போதைய விலையில் லிட்ரோ சமையல் எரிவாயு தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கடன்மறுசீரமைப்பின் பின்னர் ரூபாவின் பெறுமதி நிலையானதாக அமையும்

## மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு) நாட்டின் பொருளாதாரம் சிறந்த முறையில் முன்னோக்கி நகர்வதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு செயலாற்றத்தின் அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையே இதற்குக் காரணம் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் எதிர்மறையான தாக்கத்தை கொண்டிருந்தாலும் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் சாதகமாக இருக்கும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.

ஜூலை மாதத்தில், பணவீக்கம் 6.3 ஆக காணப்பட்டது.

இந்தநிலையில், 4 இற்கும் 6 இற்கும் இடைப்பட்ட அளவில் உள்ள பணவீக்கத்தை மாத்திரமே இலங்கையால் தாங்கிக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கடன் மறுசீரமைப்பு செயன்முறை நிறைவடைந்ததன் பின்னர் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நிலையான மட்டத்தில் இருக்கும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது சமர்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை ஆராய்ந்த பின்னர், அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கான விண்ணப்பங்களை கோர நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# பாதாள உலக குற்றவாளிகள் துபாயில் பதுங்கியுள்ளதாக தகவல்

## தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு) இலங்கையைச் சேர்ந்த பாரிய பாதாள உலகக் குற்றவாளிகளாகக் கருதப்படும் 34 குற்றவாளிகள் துபாயில் தலைமறைவாக இருப்பதாக பொலிஸ் உளவுத் துறை நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், பாரிய போதைப் பொருள் கடத்தல், இலங்கையில் உள்ள பணக்காரர்களிடம் கோடிக்கணக்கான ரூபாய் கப்பம், ஒப்பந்தப் பணத்திற்காக மனித கப்பம் போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபட்டு 34 பாதாள உலக குற்றவாளிகளே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் சிலருக்கு இதற்கு முன்னரே சர்வதேச சிவப்பு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி)

# இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த முடிவு

(கொழும்பு) செப்டெம்பர் முதல் வாரத்தில் மேலும் 300 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வருடத்தில் நாட்டிற்கு 45.4 மில்லியன் டொலர் வெளிநாட்டு பணம் கிடைத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அண்மைய பொருளாதார நெருக்கடியுடன் சில பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் திகதி, 1,465 பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

அதன் பிறகு டிசெம்பர், பெப்ரவரி மற்றும் ஜூன் மாதங்களில் பொருட்களின் ஒரு பகுதி மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# முறையான பயிற்சி பெறாவிட்டால் முன்பள்ளிகளை ஆரம்பிக்க முடியாது

(கொழும்பு) முறையான பயிற்சிகளை நிறைவு செய்யாத ஆசிரியர்களால் முன்பள்ளிகளை ஆரம்பிக்க எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்படமாட்டாது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு முழுவதும் 19 ஆயிரம் முன்பள்ளிகள் உள்ளதுடன், அதில் 40 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் முறையான டிப்ளோமா பயிற்சியும் வழங்கப்படும்.

எதிர்காலத்தில் முறையான சான்றிதழ்களின் அடிப்படையில் மாத்திரமே முன்பள்ளிகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்படுவார்கள் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையில் வட்டியில்லா கடன் 7 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்குமாறு அறிவிப்பு

(கொழும்பு) வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தை கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

தகுதியானவர்களை உடனடியாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தகுதியுள்ள மாணவர்களுக்கு வட்டியில்லா நிதி உதவியைப் பெறுவதற்கு வாய்ப்பை வழங்குகிறது.

இந்த நிலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்குள் தகுதியுள்ள அனைவரையும் இந்த திட்டத்திற்கு விண்ணப்பிக்குமாறு அமைச்சு அறிவிப்பு ஒன்றை வழங்கியுள்ளது.

திட்டம் குறிப்பாக 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் A/L தேர்வை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனவே வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடைய மாணவர்கள் www.studentloans.mohe.gov.lk என்ற அதிகாரபூர்வ இணையத்தளம் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 161 மருந்து வகைகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளன

(கொழும்பு)

மேலும் 161 அத்தியாவசிய மருந்து வகைகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் அவை நாட்டிற்கு கிடைக்கும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தற்போது 850 மருந்துகள் அத்தியாவசிய மருந்துகளாக பெயரிடப்பட்டுள்ளன.

அவற்றில் 260 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அமைச்சர் தெிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் அவற்றையும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் அவர் தெரிவித்தார். (நி)

# விமான நிலையங்களுக்கு அருகில் பட்டம் விடுவதற்கு தடைவிதிப்பு

## விமான சேவைகள் நிறுவனம் அறிவிப்பு

**(கொழும்பு) இலங்கையில் விமான நிலையங்களுக்கு அருகில் வசிப்போர் சுமார் 5கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் பட்டம் விடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**

இந்த அறிவித்தலை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் விடுத்துள்ளது.

முக்கியமாக இலங்கையில் இயங்கும் 5 விமான நிலையங்களுக்கு அருகில் வசிப்போருக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், யாழ். சர்வதேச விமான நிலையம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள விமான நிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு (ரத்மலான) சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் அருகில் வசிப்போருக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட விமான நிலைய சுற்றுப் பரப்பினுள் பட்டம் விடுவதன் காரணமாக விமான ஓட்டுநர்களுக்கு சிரமம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பட்டங்கள் விமான விசிறிக்குள் சிக்கும் பட்சத்தில் அவை பாரிய சேதத்தை விளைவிக்க வாய்ப்பு உள்ளதாக வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யானை தாக்கி வயோதிபர் பலி

(திருமலை)

திருகோணமலை - கந்தளாய் பகுதியில் யானை தாக்கியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

யானையின் தாக்குதலினால் கந்தளாய் - பேரமடுவ பகுதியில் வசித்து வரும் 64 வயதான ஆர்.எம்.குணவர்தன என்பவரே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் மேலதிக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# முச்சக்கர வண்டிகளை ஒற்றை சில்லில் ஓட்டி சாகசம் காட்டிய இளைஞர் குழு

## சமூக வலைத்தளத்தில் வெளியான பதிவால் கைது

(ஹற்றன்)

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் ஹற்றன் மல்லியப்பு பகுதியில் முச்சக்கரவண்டிகளை ஒற்றைச்சக்கரத்தில் செலுத்தி சாகசம் காட்டிய இரு இளைஞர்கள் ஹற்றன் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்நிலையில் ஹற்றன் மல்லியப்பு பகுதியில் இளைஞர்கள் குழுவொன்று ஆபத்தான முறையில் முச்சக்கர வண்டிகளை செலுத்தி அதனை காணொளியாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

இந்த காணொளியின் அடிப்படையில் இரு முச்சக்கர வண்டிகளின் பதிவு எண்கள் மூலம் விசாரணை நடத்தி சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 20-30 வயதுடைய ஹற்றன் பகுதியில் வசிப்பவர்கள் எனவும்,நீண்ட விசாரணைகளின் பின்னர் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கர வண்டிகளை ஆபத்தான முறையில் செலுத்திய குற்றச்சாட்டின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக ஹற்றன் நீதவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# கொழும்பு- அபுதாபி இடையில் குறைந்த கட்டண விமான சேவை

(கொழும்பு)

இலங்கையின் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அபுதாபி விமான நிலையத்திற்கும் இடையில் குறைந்த விமான கட்டண சேவையை ஆரம்பிக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

குறித்த வெளிநாட்டு விமானச் சேவையை செயற்படுத்துவதற்காக சான்றிதழ் நேற்று முன்தினம் கட்டுநாயக்கவில் எயார் அபுதாபி விமான நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் திறமையான விமானச் செயற்பாடுகளைப் பேணுவதற்கு விமான நிறுவனத்தின் நிறுவன அமைப்பு மற்றும் வேலைத்திட்டம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டதோடு, அதற்கான பௌதீக வளங்கள், முறையான பயிற்சி, தகுதி மற்றும் அனுபவம் ஆகியவை தொடர்பிலான மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி)


## பணியாளர் தேவை

எமது உற்பத்தி, விநியோக நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பணி நிலைகளிற்கு பணியாளர்கள் தேவை.

I. கணக்காளர் (ஆண்/பெண்)
II. கணக்குப் பதிவாளர் (பெண்கள் மட்டும்)
III. விற்பனைப் பிரதிநிதி
IV. வாகனச் சாரதி
V. மில் தொழிலாளர்

- மேற்படி பணி நிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- விண்ணப்பங்களை கிழ்காணும் முகவரிக்கு 10.08.2023 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

றட்ணாஸ்(பிறைவட்) லிமிட்டட்
சன்னதி றோட், (சதோச விற்பனை நிலையம் முன்பாக) அச்சுவேலி.

(16598)

உடன் தொடர்புகளுக்கு - 021 222 6554


# ஆளணி பற்றாக்குறையால் பரிசோதனை தடைப்படும் நிலை

## அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் சங்கம்

(கொழும்பு)

கதிரியக்க தொழில் நுட்பவியலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக அரச வைத்திய சாலைகளில் கதிரியக்க மற்றும் சி.ரி.ஸ்கான் பரிசோதனை நடவடிக்கைகள் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது 400 கதிரியக்க தொழில் நுட்பவியலாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

இதன் காரணமாக தற்போது செயலிழந்துள்ள CT, PET, MR Scan இயந்திரங்களை திருத்தும் பணிகளுக்கு ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் கூறினார். (நி)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சைவ போசனமுடைய 45 வயதுடைய சதய நட்சத்திரமுடைய விவசாயம் பார்க்கும் மணமகனுக்கு சைவ போசன முடைய மணமகள் தேவை.

**விவாகரத்தானவர்.**
**சீதனம் எதிர்பார்க்கவில்லை.**

(16570)

தொடர்பு
077 908 4823


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 174

### யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்



பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவன் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மயங்கி விழும் நிலைக்கு வந்து விட்டான். தாகத்தால் உயிர் போய்விடுமோ என்று நினைத்த போது தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்திற்கு சென்று விட்டான்.

அங்கே ஒரு கையால் அடித்து இயக்கும் பம்ப்பும், அதன் அருகில் ஒரு ஜக்கில் தண்ணீரும் இருந்தன. ஒரு அட்டையில் யாரோ எழுதி வைத்திருந்தார்கள். "ஜக்கில் உள்ள தண்ணீரை அந்தப் பம்ப் செட்டில் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும். குடித்து விட்டு மறுபடியும் ஜக்கில் தண்ணீரை நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்."

அந்தப் பம்ப்போ மிகவும் பழையதாக இருந்தது. அது இயங்குமா, தண்ணீர் வருமா என்பது சந்தேகமாக இருந்தது. அது இயங்கா விட்டால் அந்தத் தண்ணீர் வீணாகி விடும். அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் தாகமும் தணியும், உயிர் பிழைப்பதற்கு உத்திரவாதமும் உள்ளது.

அவன் யோசித்தான். தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது. ஒருவேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்தப் பம்ப் இயங்குவதாக இருந்து அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், இனி தன்னைப் போலத் தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போக தானே காரணமாகி விடுவோம் என்று மனசாட்சி எச்சரித்தது.

அவன் அதற்கு மேல் யோசிக்கவில்லை. ஆனது ஆகட்டும் என்று அந்தப் பம்பில் அந்தத் தண்ணீரை ஊற்றி விட்டு அதை அடித்து இயக்க ஆரம்பித்தான். தண்ணீர் வர ஆரம்பித்தது.

தாகம் தீர, வேண்டிய அளவு தண்ணீர் குடித்து விட்டு அந்த ஜக்கில் நீரை நிரப்பி விட்டுச் செல்கையில் அவன் மனம் நிறைந்திருந்தது.

நாம் அவசியமான காலத்தில் அனுபவிப்பதை அடுத்த வருக்கும் அதேபோல பயன்படும்படி விட்டுப்போக வேண்டும். எந்த நன்மையும் நம்முடன் நின்று விடலாகாது. இந்தக் காலகட்டத்தில் பெரும்பாலான மனிதர்களிடம் அந்த நல்லெண்ணம் இருப்பதில்லை. நம் வேலை ஆனால் சரி. அடுத்தவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்ற அலட்சியம் பலரிடமும் மேலோங்கி உள்ளது.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற மனநிலையில் ஒவ்வொருவரும் இருந்தால் இந்த உலகம் இன்பமயமாகி விடுமல்லவா?

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

## பிரித்தானிய பிரதமரின் வீட்டை கறுப்புத் துணியால் மூடிய மக்கள்




(லண்டன்)

பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக்கின் வீட்டை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கறுப்புத் துணியால் மூடிய சம்பவம்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் ரிஷி சுனக் அண்மையில் கருங்கடல் பகுதியில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுத் திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கான திட்டம் குறித்து அறிவித்திருந்தார்.

இதற்கு அந்நாட்டு பசுமைப் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்ததோடு இத்திட்டத்தை கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் `யோர்க் ஷையர் பகுதியில் உள்ள பிரதமர் ரிஷி சுனக்கின் வீட்டை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முற்று கையிட்டனர்.

அத்துடன் அவரது வீட்டை பெரிய கறுப்பு துணியால் மூடி போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட 4 பேரை பாதுகாப்பு படை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் அவர்களிடம் விசாரணை இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இச் சம்பவம் இடம்பெற்ற வேளை பிரதமர் ரிஷி சுனக் மற்றும் குடும்பத்தினர் வீட்டில் இருக்க வில்லை எனவும், அவர் தனது குடும்பத்தினருடன் கலிபோர்னியா சென்றிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## உக்ரைன் அமைதி மாநாட்டில் சீனா பங்கேற்கும்?



(பீஜிங்)

சவுதி அரேபியாவில் இடம்பெறும் உக்ரைன் அமைதி மாநாட்டில் சீன பங்கேற்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த மாநாடு இந்த வார இறுதியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாநாட்டில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கவுள்ள நிலையில் சீனாவின் பங்கேற்பு தொடர்பில் உத்தியோக பூர்வ தகவல்கள் வெளியாகாவில்லை.

இருப்பினும் இந்த மாநாட்டில் சீன பங்கேற்கும் என எதிர்பார்ப்பதாக ஜேர்மனிய வெளிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## நல்ல வாசனை மூளையின் செயற்பாட்டை அதிகரிக்கும் ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

நம்மைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தில் நல்ல வாசம் இருக்கும்படியாக வைத்து கொண்டால் நமது மூளையின் செயற்பாடு அதிகரிக்கும் என்றும் வயதானால் தோன்றும் ஞாபக சக்தி குறைபாடுகள் சம்பந்தமான நோய்கள் குறையும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

ஐம்புலங்களின் செயற் பாடுகளில் ஒலி, ஒளி சம்ப ந்தமான ஆராய்ச்சிகள் உலகில் அதிகம் நடைபெற்று வருகிறது. ஆனால், மனிதர்களின் நாசியையும், அதன் நுகரும் தன்மை குறித்தும் குறைவான அளவிலேயே ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள இர்வின் கலிபோர்னியா பல்கலைகழகத்தில் ஒரு ஆராய்ச்சி நடைபெற்றது. இந்த ஆய்வில் 20 பேர் பங்கேற்றனர்.

முதலில் இவர்களின் ஞாபக சக்தி, வாய்மொழி கற்றல் திறன், திட்டமிடல், மற்றும் கவனம் மாற்றும் திறன் உட்பட பல நரம்பியல் - உளவியல் செயற்பாடுகள் கவனிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பிறகு ஆராய்ச்சியாளர்கள் இவர்களை இரு குழுக்களாக பிரித்தனர். அவர்களில் ஒரு குழுவினரிடம் ரோஜா, ஆரஞ்சு, யூகலிப்டஸ், எலுமிச்சை, மிளகுக்கீரை, ரோஸ்மேரி மற்றும் லாவெண்டர் முதலிய வாசம் கொண்ட இயற்கையான எண்ணெயை தொடர்ந்து நுகர வைத்தனர்.

ஒரு கருவியை கொண்டு காற்றில் செலுத்தப்படும் இந்த வாசத்தை தினமும் இரவில் 2 மணி நேரம், வீட்டில் பல இடங்களிலிருந்தும் அவர்கள் முகரும்படி செய்யப்பட்டது. இதே போன்று தினமும் 2 மணி நேரம், மற்றொரு குழுவினரிடம் தரமான வாசமில்லாத ஒரு பொருள் முகர செய்யப்பட்டது.

6 மாதங்கள் இந்த நடவடிக்கை தொடர்ந்தது. 6 மாதங்கள் கடந்ததும், அவர்களிடம் மீண்டும் நரம்பியல் உளவியல் திறன் பரிசோதிக்கப்பட்டது.


இதில் நல்ல வாசனையை முகர்ந்த வர்களின் முடிவெடுக்கும் திறன் முன்பிருந்ததை விட அதிகரித்திருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைக்கப்படும்
# பிரதமர் ஷெரீப் அதிரடி முடிவு

**(இஸ்லாமாபாத்)**

**பாகிஸ்தான் பாராளுமன்றம் எதிர்வரும் 9ஆம் திகதி கலைக்கப்படும் என பிரதமர் ஷெபாஷ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் வகையில் நடைபெற்ற இரவு விருந்தில் அவர் பாராளுமன்றத் தலைவர்களைச் சந்தித்த பின்னர், நாட்டின் அரசியல் நிலவரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதை அடுத்தே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன் , தற்காலிகப் பிரதமருக்கான ஏற்பாடுகள் மற்றும் தற்காலிக அரசாங்கத்தை அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டுள்ளதாக The Express Tribune தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதி பிரதமர் தேசிய சட்டமன்றத்தை கலைப்பதற்கான முறையான ஆலோசனையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியலமைப்பு விதிகளின்படி, கலைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு 48 மணிநேரத்திற்குள் ஜனாதிபதி ஆலோசனையில் கையெழுத்திட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் அந்த ஆலோசனையில் குடியரசுத் தலைவர் கையை முத்திடவில்லை என்றால், பேரவை தானாகவே கலைக்கப்படும் என்று The Express Tribune செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

## மெக்சிகோவில் பேருந்து கவிழ்ந்ததில்
# 18 பேர் உயிரிழப்பு

(மெக்சிக்கோ)

மெக்சிகோவில் பேருந்தொன்று கவிழ்ந்து வீழ்ந்ததில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் 22 பேர் காய மடைந்துள்ளனர்.

குறித்த பேருந்து வேகக் கட்டுபாட்டை இழந்த நிலையிலேயே விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த பேருந்து சாரதி கைது செய்யப் பட்டுள்ளதுடன் காய மடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனு மதிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அலைபேசி பயன்படுத்த சீனாவில் கடும் கட்டுப்பாடு



(பீஜிங்)

18 வயதுக்குட்பட்டவர்கள் அலைபேசியை பயன்படுத்துவது தொடர்பில் சீனா கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளது.

அதற்கமைய, சீனாவில் 8 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் நாளொன்றில் 40 நிமிடங்களும், 8 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஒரு மணித்தியாலமும் 16 முதல் 17 வயதுக்குட்பட்டவர்கள் இரண்டு மணித்தியாலங்கள் மாத்திரமே அலைபேசியை பயன்படுத்த முடியும்.

அத்துடன், 18 வயதுக்குட்பட்டவர்களின் அலைபேசியில் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை இணைய பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ()

# உள்நாட்டு விவகாரத்தில் தலையிட வேண்டாம்! உலக நாடுகளுக்கு நைஜர் இராணுவம் எச்சரிக்கை

(நியோமி)

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில் ஜனநாயக ஆட்சியை கவிழ்த்துவிட்டு அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. ஜனாதிபதி முகமது பாசும் கைது செய்யப்பட்டார்.

இதற்கு ஐ.நா. மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் உலக நாடுகளுக்கு நைஜர் இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இது தொடர்பாக இராணுவ ஜெனரல் அப்துல் ரஹ்மானே டிசியானி தேசிய தொலைக் காட்சியில் உரையாற்றிய போது கூறிய தாவது, நைஜர் மக்கள் மீது சொல்ல முடியாத துன்பங்களை ஏற்ப டுத்தவும், நம் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தவும் விரும்பும் அனைவரையும் தோற்கடிக்க ஒட்டுமொத்த மக்களையும் ஒற்றுமைக்காக நாங்கள் அழைக்கிறோம்.

எங்களது உள்நாட்டு விவகாரத்தில் அண்டை நாடுகள், சர்வதேச சமூகங்கள் தலையிட வேண்டாம். தேர்தலுக்கு அமைதியான சூழ்நிலையை உருவாக்குவோம் எனத் தெரிவித்தார். இராணுவ புரட்சியை அடுத்து நைஜருக்கு மின் விநியோகத்தை அண்டை நாடான நைஜீரியா நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 46 000 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் உயிர் பெற்ற புழுக்கள்
## ஆச்சரியத்தில் ஆய்வாளர்கள்

(சைபீரியா)

46,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த "ஐஸ் ஏஜ்" என்று அழைக்கப்படும் பனியுகத்தில் உறைந்துபோன புழுக்கள் உயிருடன் திரும்பியுள்ளன.

Panagrolaimus kolymaensis எனும் புழு சைபீரியாவில் உறை ந்திருந்த படிமத்தில் கண்டுபிடிக்கப் பட்டது.

படிமத்தை உருகவைத்த போது புழுக்கள் நகர்ந்ததாக PLOS Genetics சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டது.

புழுக்கள் உயிர் பிழைப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

உறைந்து போவதற்கு முன் புழுக்கள் சிறிது காலம் போதுமான நீரைப் பெற்றிருக்கவில்லை.உறைநிலைக்குக் கீழ் 80 பாகை செல்சியஸ் சூழலில் புழுக்கள் பிழைப்பதற்கு அது உதவியதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ஆய்வுக் கூடத்தில் புழுக்களுக்குப் போதுமான நீரைக் கொடுக்காதபோது அவை treh alose எனும் சர்க்கரையை உற்பத்தி செய்தன. உறைந்துபோன நிலையிலும் மரபணுவும் புரதங்களும் பாதுகாக்கப் படுவதற்குச் சர்க்கரை உதவியதாகத் தெரியவந்தது.

இந்நிலையில் புழுக்களை ஆராய்வதால் அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்குக் கூடுதல் தகவல் பெறலாம் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் தீர்வு



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கூழாமுறிப்பு,கற்சிலைமடு, காதலியார் சம்மளங்குளம், ஒலுமடு ஆகிய கிராமங்களிற்கு சுத்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் கையளிக்கப்பட்டது.

சுத்தமான குடிநீர் இல்லாது மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். அத்தோடு தீரா நோயினாலும் அவதிப்படுகின்றனர். இந்த நிலையினைப் போக்கிட சிறந்த செயற்றிட்டமாக நனோ நீர் சுத்திகரிப்பு நிலையம் கையளிக்கப்பட்டது.

மேலும் இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவாட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் கௌரவ சனத் நிசாந்த, நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சத்தியானந்த, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துளசேன, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன் , ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி, கிராம அலுவலகர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-316)

# முட்டையை போன்று பாலும் இறக்குமதி செய்ய நேரிடும்

## பண்ணையாளர்கள் ஆதங்கம்


(கிளிநொச்சி)

**முட்டையினை இறக்குமதி செய்யப்பட்டது போன்று பாலினையும் இறக்குமதி செய்யாதிருக்க ஏற்பாடு செய்யுங்கள் என கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கிளிநொச்சியில் அவர்கள் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே இவ்விடயத்தை தெரிவித்தனர். மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி நிலை காரணமாக கிளிநொச்சி கால்நடை பண்ணையாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியான காலநிலை காரணமாக நீர்நிலைகள் முற்றும் முழுதாக வற்றிய நிலையில்



காணப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்பட்டதை போன்று பாலையும் இறக்குமதி செய்யாதிருக்க கால்நடை பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உரிய தீர்வினை பெற்று தர வேண்டுமென கால்நடை பண்ணையாளர்களின் கிளிநொச்சி கரைச்சி வடக்கு கால்நடை கூட்டுறவாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.(4-100-316)

# கவிதை நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுவிற்சர்லாந்தில் வசிக்கும் அல்வாய் வடக்கைச் சேர்ந்த பைந்தமிழ் செம்மல் திருமதி. நிர்மலா சிவராசசிங்கத்தின் நான்கு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் மெதடிஸ்த ஆலயத்தின் ஆழ்வார்ப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் கொற்றை பி.கிருஸ்ணானந்தனின் தலைமையில் நடைபெற உள்ள விழாவில் வரவேற்புரையை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கச் செயற்பாட்டாளர் தென்றல் சிவம் நிகழ்த்த உள்ளார்.

நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்த முதற் பிரதிகளை ஓய்வுநிலை ஆசிரியர் செ.மதியழகன்,சமாதான நீதிவான் செ.குலவீரசிங்கம், முதுநிலைப் பொறியியல் ஆலோசகர் க.காண்டீபன் ஆகியோர் பெற உள்ளனர்.

நூல்களின் நயவுரைகளை எழில் விருத்தம் நூலுக்கு வல்வை சிதம்பராக் கல்லூரி ஆசிரியர் கலாநிதி க.குணேஸ்வரனும்,பொன்வண்ணம் நூலுக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தனும்,சிந்து கவிச்சாரல் நூலுக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர் மா. செல்வதாசும், ஓடைநிலா நூலுக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையின் முன்னாள் செயலர் மு.அனாதரட்சகனும் ஆற்ற உள்ளனர்.நிறைவாக ஏற்புரையை நூலாசிரியர் ஆற்ற உள்ளார். (4)



அருள்மிகு சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி "இசை அர்ச்சனை" குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "ஆடிவேல் இசை நிகழ்ச்சி" ஆனது பிரம்மஸ்ரீ. A.G.S. சுவாமிநாதன் சர்மா, அரவிந்தன் சுப்ரமணியம் சர்மா, அனந்த நாராயணன் சர்மா, வாசுகி சுவாமிநாதன் சர்மா, நந்தினி சுவாமிநாதன் சர்மா ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி

7 ஆம் திகதி காலை 9 மணிக்கு நெடுக்குளம் தாய்மார் கழகம், முற்பகல் 11 மணிக்கு வசந்தபுரம் CC சனசமூக நிலையம்,பிற்பகல் 2.30 மணிக்கு கொலன் தோட்டம்.

8 ஆம் திகதி காலை 9 மணிக்கு 3ம் குறுக்கு தெரு கொழும்புத்துறை, முற்பகல் 11 மணிக்கு 1 ம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை , பிற்பகல் 2.30 மணிக்கு 2 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை.

9 ஆம் திகதி காலை 9 மணிக்கு எழிலூர் சனசமூக நிலையம்,முற்பகல் 11 மணிக்கு 5 ஆம் குறுக்கு தெரு கொழும்புத்துறை, பிற்பகல் 2.30 மணிக்கு சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம்.

10 ஆம் திகதி காலை 9 மணிக்கு மகேந்திரபுரம், முற்பகல் 11 மணிக்கு வளன் புரம்,பிற்பகல் 2.30 மணிக்கு சென்மேரிஸ் கோயில் (AV).

11 ஆம் திகதி காலை 9 மணிக்கு A.V வீதி புகையிரத வீதி சந்தி,முற்பகல் 11 மணிக்கு கொழும்புத்துறை வதானையார் லேன்,பிற்பகல் 2.30 மணிக்கு பாசையூர் சனசமூக நிலையம்.

14 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஈச்ச மோட்டை, சனசமூக நிலையம் பாசையூர், முற்பகல் 11 மணிக்கு புதுக்குடியிருப்பு,பிற்பகல் 2.30 மணிக்கு பாண்டியன்தாழ்வு (புனித அன்னமாள் கோயில் அருகில்)

15 ஆம் திகதி காலை 9 மணிக்கு வில்வந்தெரு, முற்பகல் 11 மணிக்கு புளியடிச்சந்தி இலந்தைக்குளம் ,பிற்பகல் 2.30 மணிக்கு கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம்.

16 ஆம் திகதி காலை 9 மணிக்கு விதானையார் லேன் ஈச்சமோட்டை,முற்பகல் 11 மணிக்கு பாசையூர் மகப்பேற்று நிலையம், பிற்பகல் 2.30 மணிக்கு சுண்டிக் குளம் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது .

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும்.ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்திருக்கின்றார். (4)

# பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் பொங்கல் உற்சவம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று காலை ஆரம்பமாகி சிறப்புற இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய முறைப்படி கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு உற்சவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாலை கொக்குத் தொடுவாய் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு ஆலய பூசகரால் பாரம்பரிய முறைப்படி பூசை வழிபாடுகள் இடம்பெற்று இன்று அதிகாலை 4 மணியளவில் பரிகலம் வழிவிடுதல் நிகழ்வு இடம்பெற்று பொங்கல் உற்சவம் நிறைவுறும்.(4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13 ஆவது திருத்தம் தொடர்பான

# முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பான தங்கள் முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வக்கட்சி மாநாட்டின் போது ஒப்புக் கொள்ளப்பட்டபடி, எதிர்வரும் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக குறித்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (நி)

### ஐ.எம்.எப் இன்

# நிபந்தனைக்கு அமையவே நீர்க்கட்டண அதிகரிப்பு

### திலங்க சுமத்திபால

(கொழும்பு)

நீர்க்கட்டணத்தை அதிகரித்துள்ளதன் மூலம் அரசாங்கம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை மீண்டும் கஷ்டத்துகுள்ளாக்கி இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமையவே இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது என ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியின் செயலாளர் திலங்க சுமத்திபால தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டத்துடன் வாழ்க் கையை கொண்டு செல்லும் நிலையில் அரசாங்கம் தற்போது நீர் கட்டணத்தை பாரியளவில் அதிகரித்துள்ளது.

இது கஷ்டப்படும் மக்கள் மீது சுமத்தியிருக்கும் பாரிய சுமையாகும். புதிய நீர் கட்டணத்தின் பிரகாரம் முதல் 5அலகுகளுக்கு இதுவரை அறவிடப்பட்ட 20 ரூபா தற்போது ஒரு அலக்குக்கு 60 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாதக்கட்டணத்தை 15 அலகுகள் வரை 300 ரூபாவாக அதிகரித்திருக்கிறது.

சாதாரண வீட்டுப்பாவனையாளர்கள் மாதத்துக்கு 15 அலகுகள் வரையே நீர் பாவிக்கின்றனர். நீர் பாவனையாளர்களில் நூற்றுக்கு 62 வீதமானவர்கள் மாதத்துக்கு 15 அலகுகள் பாவிப்பவர்களாகும். இவர்களின் கட்டணம் அதிகரித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் நிதி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதாரண மக்களின் கஷ்டம் தொடர்பில் எந்த உணர்வும் இல்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசாங்கம் அனைத்து வகையான கட்டண அதிகரிப்புகளை மேற்கொள்ளும்.அதில் சந்தேகம் இல்லை.

அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கத்துக்கு வறுமை நிலையில் இருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழுங்க எந்த திட்டமும் இல்லை.

எனவே மக்கள் பொருளாதார ரீதியில் கஷ்டத்துடன் வாழ்வாதாரத்தை கொண்டு செல்லும் நிலையில் நீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக அரசாங்கம் மீள் பரிசீலனை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 300 | 350 |
| தக்காளி | 250 | 300 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 220 | 300 |
| கோவா | 250 | 220 | 300 | 300 |
| கரட் | 350 | 540 | 520 | 550 |
| பூசணி | 120 | 120 | 120 | 140 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 300 | 350 | 200 | 350 |
| வெண்டக்காய் | 150 | 70 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 140 | 150 |
| லீக்ஸ் | 250 | 200 | 240 | 250 |
| பீற்றூட் | 180 | 180 | 180 | 200 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 360 | 300 |
| போஞ்சி | 450 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 200 | 180 | 300 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 60 | 20 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 80 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2882

Search for people, places and things

**தீபா**

அடுத்த மாதம் புதுசா ஒரு சட்டம் போட போறாங்க... அழகா இருக்கிறவங்க வரி கட்டனுமாம்! நீங்க எல்லாரும் தப்பிச்சிட்டிங்க...



நான் தான் எவ்வளவு கட்டனுமோ தெரியலை!!!

**பாபு**

வெயிட் பண்ணு சிக்னல் விழுந்ததும் போவோம்...



இல்லை எண்டா கழுதைங்க ரூல்சை மதிக்கலைன்னு பேசுவானுங்க...

**நிலானி**

அடுப்பில பாலை வைச்சிட்டன் அடுத்து என்ன செய்யிறது...



**ஜெமிலன்**

சூரியன் கண்டிப்பா பெண் தான் மச்சான்... எப்படி மச்சி சொல்ற?



ஆமா ஒன்பது கோளும் அதையே சுத்துதே...

**வக்ஷலா**

என்னடா பிரியாணில ஒரே சிகரெட் துண்டா இருக்குன்னு கேட்டா...



தம் பிரியாணி தானே கேட்டாய் எண்டு சொல்றான்... நீங்கல்லாம் நல்லா வருவீங்கடா...

**சதீஸ்**

அந்த பிச்சைக்காரனுக்கு என்ன திமிர் பாருங்க! என்ன சொல்றான்.



பசிக்குதுன்னு சொன்னான் நேற்று சாப்பாடு போட்டன்...இன்றைக்கு வந்து சமைப்பது எப்படி எண்ட புத்தகத்தை தந்திட்டு போறான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 248





மறுபடியும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு மதுரையைக் கைப்பற்றி மீனக்கொடியை ஏற்றினான். இதையெல்லாம் கேட்ட போது உனக்கும் எனக்கும் எப்படிப்பட்ட வீராவேசம் உண்டாயிற்று என்பது ஞாபகம் இருக்கிறதல்லவா? நாம் இருவரும் உடனே புறப்பட்டுப் பழையாறைக்குச் சென்றோம். என் தந்தை சக்கரவர்த்திக்கு அப்போதே உடல் நலம் கெடத் தொடங்கியிருந்தது. கால்களின் சுவாதீனம் குறைந்திருந்தது. ஆயினும் சக்கரவர்த்தி பாண்டிய நாட்டுப் போர்க்களம் புறப்படச் சித்தமாயிருந்தார். வேண்டாம் என்று நான் அவரைத் தடுத்தேன். பாண்டிய சைன்யத்தை முறியடித்து மதுரையை மீண்டும் கைப்பற்றி வீரபாண்டியனுடைய தலையையும் கொணராமல் சோழ நாட்டுக்குத் திரும்புவதில்லை என்று என் தந்தை முன்னால் பிரதிக்ஞை செய்தேன். அப்போது நீயும் என்னுடன் இருந்தாய்.

என் பிரதிக்ஞையை ஒப்புக்கொண்டு என் தந்தை நம்மைப் பாண்டிய நாட்டுப் போர்க்களத்துக்கு அனுப்பினார். ஏற்கனவே படைத் தலைமை வகித்துச் சென்றிருந்த கொடும்பாளூர் பூதிவிக்கிரம கேசரியின் தலைமையில் நாம் போர் செய்ய வேண்டும் என்று பணித்தார். அதற்குச் சம்மதித்து நாம் சென்றோம்.

வழியில் பெரிய பழுவேட்டரையரைச் சந்தித்தோம். அவரைப் படைத் தலைவராக்காமல் கொடும்பாளூர் வேந்தரை நியமித்ததில் பழுவேட்டரையருக்கு அதிருப்தி உண்டாகியிருந்தது என்பதை அறிந்தோம்.

"நம்முடைய போர் ஆவேசத்தைக் கண்டு சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரி யுத்தம் நடத்தும் பொறுப்பை நம்மிடமே ஒப்புவித்துவிட்டார். நண்பா! அந்த யுத்தத்தில் நீயும் நானும் நம்ப முடியாத வீரச் செயல்களைப் புரிந்தோம் என்று பெருமை கொள்வதில் யாதொரு தவறும் இல்லை. பாண்டிய சைன்யத்தை முறியடித்து மதுரையைக் கைப்பற்றினோம். அத்துடன் நாம் திருப்தி அடைந்துவிடவில்லை.

மறுபடியும் பாண்டிய சைன்யம் தலையெடுக்க முடியாதபடி அதை நிர்மூலம் செய்து விட விரும்பினோம். சிதறி ஓடிய வீரர்களை நாலா பக்கத்திலும் துரத்திச் சென்று ஒருவர் மிச்சமில்லாமல் துவம்ஸம் செய்துவிடும்படி நம் படை வீரர்களுக்குக் கட்டளையிட்டோம்.

நாம் மட்டும் ஒரு வலிமையான படையுடன் பாண்டியனைத் துரத்திக் கொண்டு போனோம். உயரமாகப் பறந்த மீனக் கொடி பாண்டியன் எந்தத் திசையை நோக்கி ஓடுகிறான் என்பதை நமக்குக் காட்டியது. அந்தத் திசையை நோக்கி நாமும் சென்று அவனைப் பிடித்தோம்.

வீர பாண்டியனைச் சுற்றிலும் ஆபத்துதவிகள் மதில் சுவரைப் போல் பாதுகாத்து நின்றார்கள். சோழ நாட்டு வேளக்காரப் படையைக் காட்டிலும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் ஒருபடி மேலான வீரர்கள். பின்வாங்கி ஓடுவதில்லையென்றும் தங்கள் உயிரை அளித்தாவது பாண்டிய மன்னனைக் காப்பாற்றுவோம் என்றும் சபதம் செய்தார்கள்.

அது சாத்தியப்படாமற் போய், பாண்டிய மன்னனுக்கு ஆபத்து வந்து விட்டால், தங்கள் தலையைத் தாங்களே வெட்டிக் கொண்டு பலி கொடுப்போம் என்று சபதம் பூண்டவர்கள். அப்படிப்பட்ட வீரர்கள் தங்கள் கடனை நிறைவேற்றினார்கள். ஒருவர் மிச்சமின்றி அவர்களைக் கொன்று தீர்த்தோம்.

இறந்தவர்களின் சவங்கள் மலை மலையாய்க் குவிந்தன. ஆனால் அவர்களுக்கு நடுவில் வீரபாண்டியனை நாம் காணவில்லை. மீனக் கொடியைப் பார்த்து நாம் ஏமாந்து போனோம். மீனக் கொடியைத் தாங்கிக் கொண்டு யானை ஒன்று நின்றது. ஆனால் அதன் பேரிலோ, பக்கத்திலோ பாண்டிய மன்னனைக் காணவில்லை! வீரபாண்டியன் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி ஒளிந்து கொள்ளுவதில் சமர்த்தன் அல்லவா.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கோழிக்குஞ்சு



சேவலைக் கோழி பத்து முட்டைகளை இட்டது. அந்தப் பத்து முட்டைகளையும் இருபத்தியொரு நாள்கள் அடைகாத்தது. இருபத்தியோராம் நாள் முட்டைகளின் ஓட்டை உடைத்துக் கொண்டு ஏழு குஞ்சுகள் வெளியே வந்தன. மூன்று முட்டைகள்

அப்படியே இருந்தன. சேவலைக் கோழி அந்த முட்டைகளை உருட்டிப் பார்த்தது.

ஒன்றும் அசையவில்லை. அந்த முட்டைகளை அடைகாத்த கூட்டிலிருந்து தள்ளிவிட்டது. அந்த மூன்று முட்டைகளும் கூமுட்டைகள். சேவலைக் கோழி உண்ணாமல் உறங்காமல் அடைகாத்துப் பொரித்த அந்த ஏழு குஞ்சுகளையும் பெருமையுடன் பார்த்து.

ஒரு குஞ்சு வெள்ளை நிறத்தில் இருந்தது. ஒரு குஞ்சு சேவலை நிறத்தில் இருந்தது. ஒரு குஞ்சு கறுப்பு நிறத்தில் இருந்தது ஒரு குஞ்சு கறுப்பில் வெள்ளைப் புள்ளிகளுடன் இருந்தது ஒரு குஞ்சு வெள்ளையில் கறுப்புப் புள்ளிகளுடன் இருந்தது ஒரு குஞ்சு சாம்பல் நிறத்தில் இருந்தது ஒரு குஞ்சு சேவலையும் கறுப்பும் கலந்து இருந்தது.

எல்லாக் குஞ்சுகளும் கிய்யா.. கிய்யா.. கிய்யா.. கிய்யா.. என்று குரல் எழுப்பிக் கொண்டு அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தன.

தாய்க்கோழி "கெக் கெக் கெக் கெக் கெக் எல்லோரும் வாங்க'' என்று கத்தியது. உடனே எல்லாக் குஞ்சுகளும் தாய்க் கோழியின் அருகில் வந்து நின்றன. ஆனால், சாம்பல் நிறக் குஞ்சு மட்டும் வரவில்லை . அந்தக் குஞ்சு அப்படியே உலாத்திக் கொண்டிருந்தது.

தாய்க் கோழிக்கு கோபம். உடனே கொஞ்சம் சத்தமாய், "க்ர்ர்ர் ர்ர் ர்ர் ர்ர் ர் எனக்குக் கோபம் வந்துருச்சி .. உடனே வா ..." என்று கத்தியது. தாய்க் கோழியிடமிருந்து விலகியிருந்த சாம்பல் நிறக் குஞ்சு மெல்ல அலட்சியமாய் நடந்து வந்து அருகில் நின்றது. தாய்க்கோழி சாம்பல் நிறக்குஞ்சை முறைத்துப் பார்த்தது. ஆனால், அதை எல்லாம் கண்டு கொள்ளவில்லை சாம்பல் நிறக்குஞ்சு.

சேவலைக் கோழி குஞ்சுகளிடம், "குழந்தைகளே நான் சொல்றதைக் கவனமாகக் கேட்டுக்கங்க.. நான் 'கெக்' னு சொன்னா கவனம்னு அர்த்தம் 'கே கெக் கே கே கே' னு கூப்பாடு போட்டா ஆபத்து ஆபத்து ஓடி வாங்க!னு அர்த்தம்.

'கெ ...கெ ...கெ ...'னு மெள்ளக் கூப்பிட்டா இரை இருக்கு வாங்கன்னு அர்த்தம்.. இன்னிக்கு இது தான் உங்களுக்கு பாலபாடம். எல்லோரும் கேட்டுக்கிட்டீங்களா? "என்று பேசியது. அம்மா சொல்வதை எல்லாக் குஞ்சுகளும் ஆர்வத்துடன் கேட்டன. சாம்பல் நிறக்குஞ்சு மட்டும் காதில்

வாங்காமல் வாய்க்குள்ளேயே கிய் கிய்யா ...கிய்யா ... கிய்கிய்யா ...கிய்யா ... என்று பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முயற்சிகள் என்னை பலமுறை கைவிட்டதுண்டு. ஆனால் நான் ஒருமுறைகூட முயற்சியை கைவிடவில்லை. – தோமஸ் அல்வா எடிசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீங்கள் பாராளுமன்றம் செல்வதால் எமக்கு ஏதேனும் நன்மை உண்டா?

அன்புக்குரிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அன்பு வணக்கம்.

பொதுத் தேர்தலின்போது கடும் பிரசாரம். தேர்தல் விஞ்ஞாபனம். எங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள் நாங்கள் உரிமை பெற்றுத் தருகின்றோம் என்ற கர்ச்சிப்புகள்.

இதர அரசியல் கட்சிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் எனத் தேர்தல் களத்தில் நின்று வெற்றி பெற்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே!

நீங்கள் பாராளுமன்றத்துக்குச் செல்வதால் தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மை உண்டா என்று ஒரு கணம் சிந்தியுங்கள்.

பாராளுமன்றத்தில் நீங்கள் உரையாற்றுகிறீர்கள். ஆனால் பாராளுமன்ற ஆசனங்கள் அனைத்தும் வெற்றிடமாக இருக்கின்றன.

நல்ல காலம் சபாநாயகர் கட்டாயம் இருப்பார் என்ற ஒரே நம்பிக்கை மட்டுமே உங்களுக்குரியது.

பாராளுமன்ற ஆசனங்கள் வெறுமையாக இருக்கும்போது, நீங்கள் ஆற்றுகின்ற உரை கன்சாட்டில் பதிவாகுமாயினும் அதனை யாரேனும் திரும்ப வாசிப்பார்களா என்ன?

அப்படி வாசிக்கின்ற வழமை நீங்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்திருக்குமாயின், வர்த்தமானியில் தொல்லியல் சின்னங்களாக வெளியிடப்பட்ட பறாளாய் முருகன் ஆலய அரச மரம், கீரிமலை புனித தீர்த்தக்கேணி ஆகிய விடயங்களைக் காலம் கடந்து அறிய வேண்டி இருந்திருக்காது.

தவிர, இதுகாறும் நீங்கள் பாராளுமன்றத்துக்குச் சென்று அங்கு கடும் தொனியில் உரையாற்றிய இருக்கிறீர்கள்.

அதனால் ஏதேனும் சாதகமான காரியங்கள் நடந்ததான வரலாறு இதுவரை கிடையாது.

நீங்கள் மட்டுமல்ல. அரசாங்கத்துடன் சேர்ந்து நிற்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் எதுவும் செய்ய முடியவில்லை. எதனையும் சாதிக்க முடியவில்லை.

நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும்போது, குருந்தூர்மலை பறிபோகிறது. வெடுக்குநாறிமலையில் விக்கிரகம் உடைக்கப்படுகிறது.

கன்னியா வெந்நீரூற்றை இழந்துவிட்டோம். இப்போது எங்கள் படலைக்கு வந்து விட்டார்கள்.

பறாளாய் முருகன் ஆலய அரச மரத்துக்கு அவர்கள் உரிமை கோருகிறார்கள். இனி சங்கமித்தை நீராடிய இடம் கீரிமலை கேணி என்று கல்வெட்டுப் பதிப்பார்கள்.

அப்படியானால் நீங்கள் ஏன்? பாராளுமன்றம் செல்கிறீர்கள்.

அன்புக்குரிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! நீங்கள் அத்தனை பேரும் உங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்யுங்கள். இலங்கையில் ஜனநாயகம் இல்லை. தமிழர்களுக்கு உரிமை இல்லை. ஆகையால் சிங்களப் பாராளுமன்றத்தில் நாங்கள் உறுப்பினர்களாக இருக்க மாட்டோம் என்று கூறி, உங்கள் பதவிகளைத் தூக்கி எறியுங்கள்.

உங்களின் இராஜினாமா உலகம் முழுவதும் பேசப்படும். இலங்கை ஆட்சியாளர்கள் இனவாதிகள் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவும்.

அதன்பின் எங்கள் உரிமைகளைப் பாதுகாக்க உலகம் தயாராகும். இது நடந்தேயாகும்.

# பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டாலும் 13 ஆவது திருத்தத்தை குழப்பமாட்டோம்

## விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாததை ஒரு பிரச்சினையாக மாற்றி, 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதை குழப்பமாட்டோம் என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி 13வது திருத்தம் பற்றி பாராளுமன்றத்தில் பேசப்போகிறார். அவர் என்ன பேசப்போகிறார் என தெரியவில்லை. பொலிஸ் அதி காரத்தை தவிர்த்து 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதாக கூறலாம். பொலிஸ் அதிகாரத்தை அவர்கள் தவிர்த்தாலும், அதை ஒரு பிரச்சினையாக மாற்றி 13ஆவது திருத்தத்தை முற்றுமுழுதாக அமுல் படுத்தாமலிருப்பதை தவிர்க்கப் பார்க்கிறோம்.

எந்த அரசியல்வாதியும் எது சரியென்பதை பார்த்து செயற்படுவதில்லை. மக்கள் எதை ஆதரிப்பார்கள் என பார்த்துத்தான் செய்வார்கள்.

மாகாண சபைகளை எப்படி அதிகாரமிக்கதாக மாற்ற முடியுமென்பது குறித்த ஒரு ஆவணத்தை கலாநிதி விக்னேஸ்வரனுடன் இணைந்து ஒரு ஆவணத்தை கையளித்துள்ளேன். அதை நடைமுறைப்படுத்துவதாக கூறியுள்ளார்.

அவர் அதைத்தான் கூறப்போகிறாரா என தெரியாது. ரணில் அண்மையில் இந்தியா போய் வந்துள்ளார். தம் ஊடாக தயாரிக்கப்பட்ட 13வது திருத்த சட்டத்தை அமுல்படுத்த வேண்டும், தமிழ் மக்களில் அதிகார பகிர்வு நடத்தப்பட வேண்டுமென மோடி குறிப்பிட்டுள்ளார். சிங்கள கட்சிகள் சொல்வதைப்போல, அவர்கள் விரும்பியபடி அதிகாரங்களை குறைக்க முடியாது. அதை சர்வகட்சி கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஏனெனில் இரண்டு அரசுகள் கையெழுத்திட்ட ஒப்பந்தம் அது.

ரணில் பாராளுமன்றத்தில் 13 ஆவது திருத்தம் பற்றி உரையாற்ற முன்வந்தது நல்ல விடயம். இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கம் என்ன மனோநிலையில் உள்ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள உதவும்.

13ஆவது திருத்த சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தில் எப்படி ஆதரவு கிடைக்குமென சொல்ல முடியாது. அவர் சிங்கள மக்கள் அனைவரும் தம்மை ஆதரிப்பார்கள் என நினைத்து செயற்படுகிறார் என நினைக்கிறேன்.

இதில் இன்னொரு விடயமும் உள்ளது. மற்றைய 7 மாகாணங்களில் உள்ள சிங்கள மக்கள் தலைவர்கள் பொலிஸ் அதிகாரம் தமக்கும் தேவையென பேசியுள்ளனர். பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு கொடுப்பதில்தான் அவர்களுக்கு பிரச்சினை.

பொலிஸ் அதிகாரங்களை அந்தந்த மாகாணங்களிற்கு வழங்கி, அங்குள்ள படித்த இளைஞர்களை வேலைக்கமர்த்துவதில் என்ன பிரச்சினையென்ற கேள்வியெழுப் போகிறது. எம்து இளைஞர்கள் பொலிஸில் இணைந்தபின் வன்முறையில் இறங்கலாம் என நினைத்தால், பாண்டிச்சேரியில் உள்ளதை போல பொல்லும், கைவிலங்கும் கொடுத்து வரையறுக்கப்பட்ட பணிகளை செய்யலாம் என்றும் கூறியிருந்தேன். இதற்கு காரணம் என்னவென்றால், நாங்கள் சிறிதுசிறிதாக எமது மக்களுக்குரிய அதிகாரங்களை கைவசம் எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லாக் கட்சிகளும் எதேதோ பேசுகிறார்கள். சமஷ்டி, கூட்டு சமஷ்டியென்றெல்லாம் பேசுகிறார்கள். இவையெல்லாம் எங்கோ இருக்கின்ற தூரத்து குறிக்கோள். இப்பொழுது எமது மக்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாத நிலையில், நாம் அதிகாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக்கொண்டு அதிகார விட்டத்தை படிப்படியாக பெரிதுபடுத்திக் கொண்டு போக வேண்டும். அதனால்தான் 13வது திருத்தத்தை அமுல்படுத்தும்படி கேட்கிறோம். அது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வில்லையென்பது எல்லோருக்கும் தெரியும். அனால் இப்பொழுது தமிழ் மக்களுக்கு அதிகாரம் தேவை. அது கிடைத்தால் தற்போது பௌத்த பிக்குகள் உள்ளிட்டவர்கள் செய்யும் பல விடயங்களை தடுக்கலாம் என்றார்.

(ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கூல் மேன் ஐஸ் தொழிற்சாலை, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை சந்தி, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி ஐஸ் தொழிற்சாலை சுப்பர் மடம், தொலைத் தொடர்பு- மாலுசந்தி, இலகடி, இன்பருட்டி, இன்பருட்டி பிள்ளையார் கோவில், காந்தியூர், மாலுசந்தி, மந்திகை அம்மன் கோவில், முத்துமாரியம்மன் கோவில் அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வதிரி - உடுப்பிட்டி பருத்தித்துறை வீதி சந்தி, வியாபாரிமூலை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 66 ஆம் பிரிவு இராணுவ முகாம் - பூநகரி, அரசபுரம் இராணுவ முகாம், பிரதேச செயலகம் பூநகரி, பொறியியல் பீடம், ரொப்பிக்கல் லங்கா (தும்பு தொழிற்சாலை) புலோப்பளை, 66 ஆம் பிரிவு இராணுவ பயிற்சி பள்ளி – அரசபுரம், பூநகரி, அரசபுரம், ஆரத்திநகர் அல்லிப்பளை, அறிவியல் நகர், செல்லையாதீவு, தென்னை ஆராய்ச்சி மையம் - தர்மகேனி, பண்ணை வீதி புலோப்பளை, ஞானிமடம், கௌதாரிமுனை, காஞ்சிபுரம், கருக்காய்த்தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன், நல்லூர் பூநகரி, நெடுங்குளம் பள்ளிக்குடா, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர் கடை சந்தி, பளை, பள்ளிக்குடா. பள்ளிக்குடா சுனாமித் திட்டம், பரமங்கிராய், பரந்தன் நகரம், புலோப்பளை, செம்மண்குன்று, சின்னபல்லவராயன் கட்டு, தம்பகாமம், தம்பிராய், தரணிக் குடியிருப்பு, தர்மகேனி, வாடியடி பூநகரி, வரகுக்காடு அல்லிப்பளை, வெட்டுக்காடு (கௌதார்rிமுனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வயம்ப பல்கலைக்கு புதிய வேந்தர் நியமனம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் வேந்தராக காப்புறுதி நிறுவனத்தின் ஸ்தாபகரான கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமானது, உடனடியாக அமுலாகும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 5 வருட காலத்திற்கு இப்பல்கலைக் கழகத்தின் வேந்தராக பி.ஏ.கிரிவந்தெனிய செயற்படவுள்ளார்.

(ம-7)

## ‘சேறு’ குறும்படம் நாளை சாவகச்சேரியில்

(யாழ்ப்பாணம்)

இயக்குநர் எம்.என். லிப்ஸியாவின் பதின்ம வயது திருமணத்தை பற்றி பேசும் "சேறு" என்கிற ஈழத்து குறும்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி "பாலா" திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியடைந்தாலும் இளம் வீரர்களுக்கு நல்ல அனுபவம் கிடைத்திருக்கும்

## கப்டன் ஹர்திக் பாண்ட்யா



இந்திய கிரிக்கெட் அணி வெஸ்ட்இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி தொடரை இந்தியா கைப்பற்றியது. இரு அணிகள் மோதும் 5 ஆட்டம் கொண்ட 20 ஓவர் போட்டி தொடரில் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் தரோபாவில் நடந்தது.

இதில் வெஸ்ட்இண்டீஸ் அணி 4 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. தோல்வி குறித்து இந்திய அணி கப்டன் ஹர்திக் பாண்ட்யா கூறியதாவது.

இலக்கை நோக்கி விளையாடியதில் நாங்கள் சரியான திசையில் இருந்தோம். சில தவறுகளை செய்து விட்டோம். ஆனால் அது பற்றி கவலைப்பட தேவையில்லை. ஏனென்றால் இது இளம் வீரர்களை கொண்ட அணி. அவர்கள் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த ஆட்டம் முழுவதும் எங்கள் கட்டுப்பாட்டில்தான் இருந்தது.

20 ஓவர் கிரிக்கெட்டில் தொடர்ந்து விக்கெட்டுகளை இழந்தால் சேசிங் செய்வது மிகவும் கடினமாகிவிடும். நாங்கள் பட்டிங் செய்யும் போது தொடர்ந்து விக்கெட்டுகள் சரிந்ததால் தோல்வி ஏற்பட்டது. ஆடுகளம் சூழலுக்கு ஏற்ப மூன்று சுழற்பந்து வீச்சாளர்களை தேர்வு செய்தோம்.

மேலும் சாகலும் குல்தீப் யாதவும் இணைந்து விளையாட வேண்டும் என்று விரும்பினோம். அக்சர்பட்டேலை பட்டிங்கிலும் கொண்டு வந்து இருந்தோம். முகேஷ் குமாருக்கு இந்த இரண்டு வாரங்கள், அவரது வாழ்க்கையில் சிறப்பானது. மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் அறிமுகமாகி உள்ளார். அறிமுக வீரர் திலக் வர்மாவின் பட்டிங்கை பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த ஆட்டம் இளம் வீரர்களுக்கு நல்ல அனுபவத்தை கொடுத்து இருக்கும் என்று நம்புகிறேன் என அவர் கூறினார். இரண்டாவது 20 ஓவர் போட்டி நாளை கயானாவில் நடைபெறும்.(4)

# அறிமுக போட்டியில் அசத்திய திலக் வர்மா

வெஸ்ட் இண்டீஸ் - இந்தியா அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில் 5 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடர் நேற்று தொடங்கியது.

ஹர்திக் பாண்ட்யா தலைமையிலான இந்திய அணியின் திலக் வர்மா மற்றும் முகேஷ் குமார் அறிமுகமாயினர். இரு அணிகளுக்கு இடையேயான முதல் இருபது-20 போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பட்டிங் செய்தது. 20 ஓவர் முடிவில் வெஸ்ட் இண்டீஸ் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்கள் எடுத்தது.

இதனையடுத்து 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 145 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதனால் வெஸ்ட் இண்டீஸ் அணி 4 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணியில் அறிமுகமான திலக் வர்மா அதிகபட்சமாக 39 ரன்கள் எடுத்தார்.

இதில் 2 பவுண்டரி மற்றும் 3 சிக்சர்கள் அடங்கும். இதன் மூலம் அவர் அறிமுக இருபது-20 இல் அரிதான சாதனை ஒன்றை நிகழ்த்தி உள்ளார். வெளிநாட்டில் அறிமுக போட்டியில் 3 சிக்சர் அடித்த வீரர்களில் ராகுல் டிராவிட் மற்றும் முரளி விஜய் ஆகியோருடன் திலக் வர்மா இணைந்துள்ளார். (4)





ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி ஸமேத ஸ்ரீ பகவதே நமஹ



## ஸ்ரீ பரம்ஜோதி பகவதி லக்ஷ்மி கடாக்ஷ ஐஸ்வர்ய கலசபூஜை

ஸ்ரீ கல்கி பகவதி பத்மாவதி தேவியின் ஜென்ம தினத்தினை முன்னிட்டு நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் சுபீட்சத்திற்காகவும் ஐஸ்வர்ய கலச பூஜையினை நிகழ்த்துவதற்கு பகவத் ஸங்கல்பம் அமைந்துள்ளது.

### தெய்வீக அருட்பலன்கள்

- ஐஸ்வர்யத்திற்கான தடைகள் நீங்கப்பெறல்
- கடன்களிலிருந்து விடுதலை பெறுதல்
- தொழிலில் முன்னேற்றம் ஏற்படுதல்
- செல்வச் செழிப்பான வாழ்க்கை வாழுதல்
- மாங்கல்ய மற்றும் சந்தானப் பிராப்தி பெறல்
- முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள எதிர்மறையான வாழ்க்கை முறையினை மாற்றியமைத்தல்
- பரிபூரணமான ஐஸ்வர்ய சைதன்யம் கிடைக்கப் பெறல்

**இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம், நல்லூர்**
**காலம் : 06.08.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் : மாலை 3.00 மணிமுதல்**

குறிப்பு : பிரான்ஸ் அரசால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அம்மா பகவான் தீவிரபக்தரான இலங்கயரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்சன் செல்வராசாஅவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பூஜையில் கலந்து கொள்பவர்கள் கலசபூஜை செய்வதற்கான பொருட்களுடன் வருகை தரவும். மேலும், தங்களது பிரதேசங்களில் பிரத்தியேகமாக ஐஸ்வர்ய கலச பூஜையினை ஒழுங்குசெய்து மேற்கொள்ள விரும்பும் பக்தர்கள் மேலதிக தகவல்களுக்காகக் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர் கொள்ளவும்.

'பகவத் சேவை செய்வோம். நாம் பிறந்த பயனை அடைவோம்'

தொடர்புகளுக்கு:
**076 217 7697**
**077 364 7436**

ஏகத்துவ அமைப்பு
யாழ் மாவட்டம்


## முன்மொழிவு...

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களின் பரிந்துரைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக ப்பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது.

இதில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது. *(மற்றொரு செய்தி உள்ளே)*

(ம-7)

## ரணில்...

பொலிஸ், காணி அதிகாரங்களை தவிர 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட உள்ளது.

இந்த நிலையில் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-7)



வட மாகாணத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் மற்றும் கல்வி யாளர்கள், இந்தியப் பல்கலைக் கழகங்களில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைத் தொடர இந்திய கலாசார உறவுகளுக்கான உதவித்தொகைக்கு தகுதி பெறுள்ளனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தி யத் துணைத் தூதரகத்தில் மாண வர்களை சந்தித்து இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ் கரன் சந்தித்து கலந்துரையாடினார். (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

ஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆறுகால்மட பகுதியில் 80 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட பெண்ணை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து , பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் , கைதான மனைவியை பார்க்க வேண்டும் என பொலிஸ் நிலையம் வந்த கணவன் மனைவி மீது பொலிஸ் நிலையத்தினுள் வைத்து சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்நிலையில் அதிர்ச்சியடைந்த பொலிஸார், கணவனின் தாக்குதலில் இருந்து மனைவியை காப்பாற்றியதுடன், மனைவியை தாக்கிய குற்றச்சாட்டில் கணவனையும் கைது செய்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண், கணவனுக்கு தெரியாமல் போதை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதானவர் யாழில் பிரபல நகைக் கடை உரிமையாளர் ஆவார். (ம-7,33,104)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

மெகா பவர்
திகதி 04/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1544
W 10 09 36 49 60
12750

தன நிதானய
திகதி - 2023.08.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1226
R 11 26 51 75 R
29333

Lucky 7 லக்கி
திகதி 04.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 022
L7 இலக்கம் 1 2
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 2 8 7 0 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3437
சீட்டிழுப்பு திகதி 04.08.2023
S 07 08 14 72
S 29542

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 505
மிதுனம் 18 32 56 58 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/04
சீட்டிழுப்பு இலக்கம் 5196
M 8 7 8 2 0 7

## கடன் மறுசீரமை...

மேலும், தேவையில்லாத பிரச்சினைகளைத் தோற்றுவித்து, சில அரசியல் கட்சிகள் நாட்டை சீர்குலைக்க முற்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்திருந்தது. ஆனால், நாட்டை முன்னேற்றும் அதிர்ஷ்டம் எமது அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது.

முதலாவதாக தேசிய கடன் மறுசீரமைப்புப் பணிகளை நாம் நிறைவு செய்ய வேண்டும் என்றார். (ம-7)

## இறக்குமதி...

முதல் வாரத்தில் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

328 பொருட்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் கடந்த மாதம் நீக்கியது.

இதற்கமைவாக இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பொருட்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் குறைவாக குறைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## 13ஐ முழுமை...

கருத்து வெளியிட்ட அவர், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதால் மட்டும், நாட்டிலுள்ள இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது.

மாகாண சபைகளுக்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்படாத நிலையிலேயே, யாழ்.திஸ்ஸ ரஜமகா விகாரையில் சமயக்கிரியைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

இந்த நிலையில், பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் வடக்கில் ஒருபோதும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது போய்விடும்.

அடிப்படைவாத சிந்தனைக் கொண்ட அரசியல்வாதிகள் உள்ள மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக வழங்கினால், இப்போது இருக்கும் நல்லிணக்கமும் இல்லாது போய்விடும் என்றார். (ம-7)

## 450 மில்லியன்...

டுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்த பணத்தொகையை கையளித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றின்போது, இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கைக்கான நிதி மானியத்தை வழங்கியுள்ளார்.(ம-7)

## மத்திய நிலைய...

இறங்குத்துறையை தெரிவு செய்துள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் இறங்குதுறை பகுதிக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் சுற்றுலா வரும் பயணிகளுக்கான வசதிகளை தலைமன்னார் இறங்குதுறை பகுதியில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## சுழிபுரத்தில்...

இது குறித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், வரலாற்றினை திரிபுபடுத்தும் சிங்கள அரசு இன்னும் ஒரு படி மேல் சென்று சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய வரலாற்றினை மேலும் திரிபடைய செய்துள்ளது.

சங்கமித்தா இலங்கைக்கு வருகை தந்ததாக கி.மு 3ஆம் நூற்றாண்டு என வரலாற்று மூலாதாரங்களில் திரிபடைய கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆலய தர்மகர்த்தாவினர் குறித்த ஆலயம் 1768ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படும்போது எதுவித அரச மர எச்சங்கள் குறித்தும் தமது முன்னையவர்களோ அல்லது ஆதாரங்களிலோ குறிப்பிடவில்லை என வும் தற்பொழுது ஆலயத்தில் உள்ள மரம் மிகக் குறைந்தளவான காலப் பகுதிக்கு உரியது எனவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆலயத் தினரிடம் ஆகக் குறைந்தது கலந்துரையாடலை கூடச் செய்யாது ஏதேச்சதிகாரமான முறையில் இந்த சிங்கள அரசு திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

ஆகவே தொடர்ச்சியாக சிங்கள அரசு திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். இதனை வலியுறுத்தி இன்று சனிக் கிழமை காலை 10 மணியளவில் சுழிபுரம் சந்தி பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆகவே இதற்கு வலுச் சேர்க்கும் முகமாக பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புக்கள், தமிழ் தேசியத்தின்பால் செயற்படும் இளைஞர் யுவதிகள்,சிவில் சமூக பிரதிநிதிகள் தமிழ்த் தேசிய கட்சி கள் என, அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## எரிபொருள்...

கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் நாட்டிற்குள் எரிபொருள் வரிசை, உரத் தட்டுப்பாடு என்பன உருவாகும்.

அரச நிதி நிர்வாகம் பாராளுமன்றத்திற்கு பொறுப்பான விடயமாகும். பாராளுமன்றத்தின் பொறுப்புக்களை பாராளுமன்றமே நிறைவேற்றும்.

ஏனைய செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும்.

இதன்படி நிதிசார் செயற்பாடுகள் அனைத்தும் பாராளுமன்றத்திலேயே முன்னெடுக்கப்படும்.

இதன் காரணமாக பாராளுமன்றத்தின் சட்டத்திட்டங்களுக்கு அமையவே அரசாங்கம் செயற்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2170 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.04 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 22 28 49 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,103,172.40
"இரண்டாம் வரம்" 17 48 70 75 J
DLB

சனிதா
திகதி 2023.08.04 வெற்றி வாரம் 4331 வர்ணம் செம்மஞ்சள்
13 28 42 62 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,198,832.00
"இரண்டாம் வரம்" 11 24 47 73 J
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 358
சீட்டிழுப்பு திகதி 2023.08.04
பச்சை
வெற்றி இலக்கங்கள் 01 12 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,540,040/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3882 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.04 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 16 36 49 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,430,320/-
"இரண்டாம் வரம்" 14 28 43 52 மேஷம்

கப்ருக
திகதி 2023.08.04 வெற்றி வாரம் 1346 வர்ணம் ஊதா
J 01 20 22 29 31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 424,402,524.20
"இரண்டாவது வாய்ப்பு" 03 40 58 69 A
தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 1996
சீட்டிழுப்பு திகதி : 2023.08.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,325,280/-
02 17 24 61 B
"இரண்டாம் வரம்" 16 25 48 57 E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்புகள்

**dewmasweb.com**

இணையத் தளத்தில்
யாழ். மற்றும் வெளி மாவட்ட
வேலைவாய்ப்புக்களை
பார்வையிடலாம்.
(16611)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்
துறையில் (K.K.S) 10 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
துறைமுகத்தில் இருந்து
1.2 Km தூரத்தில்

தொடர்பு (16412)

**075 521 3533**


## விவாதத்தின்...

வது குறித்து பார்க்கலாம் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

"புதிய கிராமம் - புதிய நாடு" தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் அம்பாறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது 13 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதியால் கொண்டுவரபட உள்ளது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சில கட்சிகள் ஆதரவு தெரிவித்தும் சில தரப்புகள் எதிர்ப்பு தெரிவித்தும் வருகின்ற நிலையில் இதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் என்று மேலும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இவை எல்லாத்துக்குமே இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் முதலில் பாராளுமன்றத்துக்கு விவாதத்திற்கு வரட்டும் வரும்போது பார்க்கலாம் என பிரதமர் பதில் அளித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg சீனி | - 234/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg கோதுமை மா | - 189/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 199/= | |
| 1 Kg அரிசி மா | - 169/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= | |
| 1 Kg மல்லி No.1 | - 399/= | |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1820/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/-)~~ |
| 1 Kg Sunlight rose powder | - 390/= | ~~(480/-)~~ |




(16614)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
**0777 8080 30**


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1962 | | 2023 |
| 11 | | 08 |
| 17 | | 03 |



## நடனசிவம் தவலெட்சுமி

சரவணையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடனசிவம் தவலெட்சுமி அவர்கள் 03.08.2023 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - இலங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் நடனசிவம் அவர்களின் பாசமிகு மனைவியும் தனேஸ், சங்கர், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அஜித், சுரேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் புஸ்பராசா அமரர் பத்மநாதன், கேதாரநாதன்(ஈசன்), அமரர் கணேசலிங்கம், லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகோதரியும் நிர்மலாதேவி, பவானி, நாகதீஸ்வரி, அகிலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கிருசிகன், டஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 06.08.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டையாளடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 635 9141, 077 462 6761
077 871 5228

(16604)


## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் போட்டோ கொப்பி, புத்தகசாலைக் கடைக்கு அனுபவம் உள்ள/ அனுபவற்ற ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (16413)

**076 832 3682**

## விற்பனைக்கு

சினைப்படுத்தப்பட்ட
யேசி இன கலப்பு மாடு
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (16606)

**077 323 5640**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

**T.P:077 544 8503**

## வீடு வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தையில் 42 ஆவது
வீதியில் No:3 இல் இரண்டு
அறைகள், குசினி இணைந்த
குளியலறைகளுடன்
கூடிய தொடர் மாடி வீடு நாள்,
கிழமை, மாத வாடகைக்குண்டு.

(16607)

**075 278 6033**

## WORK IN UK

WORK PERMITS

CONSTRUCTION WORKERS

- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடஉரிமை (Permanent Resident)

✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES

போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

(C-7011)

CIMS COLLEGE 0777-068-777

## CANADA

VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7011)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

# Vacancy For Special Needs Teaching Assistant

கல்வியங்காட்டில் மிகவும் துடிதுடிப்பான சில விசேட
தேவையுடைய 7 வயது சிறுவனுடைய வீட்டிலும்
வெளியிலும் பயிற்சியாளர் மற்றும் பெற்றோருடன்
இணைந்து உற்சாகத்துடனும், ஆர்வமாகவும்
பொறுமையுடனும் பணியாற்றக்கூடிய இரண்டு
உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- முன் அனுபவம் தேவையில்லை
- இலவசமாக therapist ஆல் தேவையான, பயிற்சி வழங்கப்படும்.

(16603)

**உதவியாளர் காலை**

**7 Am to 1 Pm Rs 2500/= day**

**உதவியாளர் மாலை**

**1 Am to 7 Pm Rs 2500/= day**

நேர்முகத் தேர்வுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி எண்

**074 196 0160**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org